இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 18-03-2024

# மிரட்டுதல் - பறித்தல் - பத்திரப்படுத்துதல்!

**பா.**ஜ.க. அமலாக்கத்துறையை எதற்காகப் பயன்படுத்தி இருக்கிறது என்பது அம்பலம் ஆகி இருக்கிறது. அமலாக்கத் துறையால் மிரட்டப்பட்ட நிறுவனங்கள்தான் பா.ஜ.க.வுக்கு அதிகப்படியான நன்கொடைகள் கொடுத்துள்ளன என்பது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

**“இந்தியாவில் உள்ள மிகப்பெரிய கார்ப்பரேட் நிறுவனங்களை மிரட்டி பா.ஜ.க.வுக்கு நன்கொடை வழங்கவே இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. பா.ஜ.க.வுக்கு நன்கொடை வழங்காத கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு எதிராக சி.பி.ஐ., அமலாக்கத் துறை போன்ற விசாரணை அமைப்புகள் ஏவப்பட்டு வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. அதன்பிறகு அந்த நிறுவனங்கள், பா.ஜ.க.வுக்கு நன்கொடை அளித்துவிட்டால் வழக்குகள் அனைத்தும் திரும்பப் பெறப்படுகின்றன. இந்த நிதியை வைத்துத்தான் கட்சிகளைப் பிரிக்கவும், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநில அரசுகளைச் சீர்குலைக்கவும் பா.ஜ.க. அரசு பயன்படுத்தி வருகிறது. இதைவிட தேசத் துரோக நடவடிக்கை வேறு ஏதுமில்லை. பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸின் நிறுவனங்களைப் போல சி.பி.ஐ., அமலாக்கத்துறை ஆகியவை செயல்பட்டு வருகின்றன. பா.ஜ.க. அரசு அகற்றப்பட்டு இதுவரை நிகழ்த்தப்பட்ட தவறுகளுக்கு தண்டனை தரப்படும். இதுவரை நடைபெற்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் தடுப்பதே என்னுடைய உத்தரவாதம் ஆகும்”** என்று காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி சொல்லி இருக்கிறார்.

“அமலாக்கத்துறையால் சோதனைக்குள்ளான நிறுவனங்கள், தங்களைக் காப்பாற்றிக் கொள்ள பா.ஜ.க.வுக்கு தேர்தல் நன்கொடை அளித்ததாகச் சொல்வது கற்பனை” என்கிறார் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன்.

எந்தெந்த நிறுவனங்கள் ரெய்டுக்கு உள்ளானது, அதில் எவை எல்லாம் பா.ஜ.க.வுக்கு நன்கொடை வழங்கி உள்ளது என்ற தரவுகள் அனைத்தும் ஊடகங்களில் துல்லியமாக வெளியாகி வருகிறது. இதில் எதைக் கற்பனை என்கிறார் நிதி அமைச்சர்?

**‘அதிக நன்கொடை அளித்த 30 நிறுவங்களில் 14 நிறுவனங்களில் சோதனை நடத்தப்பட்டுள்ளது’ என்று முன்னாள் அமைச்சர் ஜெயராம் ரமேஷ் சொல்லி இருக்கிறார். ‘நன்கொடை கொடுத்த ஒரு நிறுவனத்துக்கு, அவர்கள் நன்கொடை கொடுத்த சில மாதங்களில் பல்லாயிரம் கோடிக்கான ரெண்டர் வழங்கப்பட்டது’ என்பதையும் அவர் அம்பலப்படுத்தி இருக்கிறார்.**

தொழில் நிறுவனங்கள் மீது அமலாக்கத்துறை (ஈ.டி.), வருமான வரித்துறை (ஐ.டி.), சி.பி.ஐ.யை ஏவி அந்த நிறுவனங்களிடம் இருந்து பா.ஜ.வு.க்கு தேர்தல் நிதி பெறப்பட்டதாக பிரபல ஆங்கில செய்தி இணையதளங்கள் இரண்டு மாதங்களுக்கு முன்பே ஆதாரத்துடன் செய்தி வெளியிட்டுள்ளன.

2018-19 முதல் 2022-23 நிதியாண்டு வரையிலான தேர்தல் ஆணைய ஆவணங்கள், வழக்கு விவரங்கள், நிதி அறிக்கைகளை ஆய்வு செய்து இந்தத் தரவுகளை திரட்டிய அந்த இணையதளங்கள் அதனை அம்பலப்படுத்தி உள்ளன.

**“கடந்த 2018-19 முதல் 2022-23 நிதியாண்டு வரை பா.ஜ.வு.க்கு நிதியளித்த நிறுவனங்கள் பட்டியலை பரிசீலித்ததில் அதில் 30 நிறுவனங்கள் மீது அதே காலகட்டத்தில் ஒன்றிய அரசின் ஈ.டி., ஐ.டி., சி.பி.ஐ. ரெய்டு நடத்தியுள்ளது. இந்த 30 நிறுவனங்களும் மொத்தம் ரூ.335 கோடியை பா.ஜ.வு.க்கு தேர்தல் நிதியாக தந்துள்ளன. இதில் 23 நிறுவனங்கள் ரெய்டு நடத்தப்படும் வரை பா.ஜ.வுக்கு ஒரு பைசா கூட தேர்தல் நிதி தந்தது இல்லை. ரெய்டு நடத்தப்பட்டதும் அந்த 23 நிறுவனங்களும் பா.ஜ.வுக்கு நிதி தர ஆரம்பித்துள்ளன. மொத்தம் ரூ.187.58 கோடி நிதியை அந்த நிறுவனங்கள் பா.ஜ.வுக்கு வாரி வழங்கி உள்ளன. 4 கம்பெனிகளில் ரெய்டு நடத்தப்பட்ட 4 மாதத்துக்குள் பா.ஜ.வுக்கு நிதி தந்துள்ளன. பா.ஜ.வுக்கு ஏற்கனவே குறைவாக நிதி தந்த 6 நிறுவனங்கள் மீது ரெய்டு நடத்தப் பட்டுள்ளது. அடுத்த சில மாதங்களிலேயே அந்த நிறுவனங்கள் பல மடங்கு அதிக நிதியை பா.ஜ.வுக்கு கொடுத்துள்ளன. தொடர்ந்து பல ஆண்டுகளாக பா.ஜ.வுக்கு நிதி தந்த நிறுவனங்கள் திடீரென நிதி தருவதை நிறுத்திவிட்டால் கூட ரெய்டு நடத்தப்பட்டுள்ளது. இப்படி 6 நிறுவனங்களை ஈ.டி., ஐ.டி., சி.பி.ஐ. அதிகாரிகள் சோதனையிட்டுள்ளனர். ரெய்டு நடந்து கொண்டிருக்கும் போதே சில நிறுவனங்கள் பா.ஜ.வுக்கு நிதி தந்ததும் தெரியவந்துள்ளது. நன்கொடை தந்த 3 நிறுவனங்களுக்கு ஒன்றிய அரசிடம் இருந்து லைசென்ஸ் உள்ளிட்ட சலுகைகள் கிடைத்துள்ளது”** - என்று அந்த ஆங்கில இணையத் தளங்கள் கடந்த பிப்ரவரி மாதமே விரிவாக எழுதி இருந்தன.

எனவே தேர்தல் பத்திரங்கள் மூலமாகத் தான் உண்மை வெளியானது என்பது இல்லை. ஊரறிந்த ரகசியம்தான் இது.

**“கட்சியில் இணைந்தால் சி.பி.ஐ., அமலாக்கத்துறை வழக்குகளை முடித்து வைத்து விடுகிறோம் என பா.ஜ.க. பேரம் பேசியது. அவர்களிடம் தலைகுனிய மறுத்துவிட்டேன்”** என்று ஆம் ஆத்மி கட்சியின் டெல்லி துணை முதல்வர் மணீஷ் சிசோடியா எப்போதோ சொல்லிவிட்டார்.

**“நீங்கள் ஏன் பா.ஜ.க.வில் சேரக் கூடாது? என்று செந்தில் பாலாஜியிடம் அமலாக்கத் துறை அதிகாரிகள் கேட்டனர்”** என செந்தில் பாலாஜியின் வழக்கறிஞர் கபில்சிபல் நீதிமன்றத்தில் சொன்னார். இதுதான் ஊழல் ஒழிப்பு லட்சணம் ஆகும்.

மேற்கு வங்க திரிணாமுல் காங்கிரஸில் எம்.பி., அமைச்சர் எனப் பொறுப்புகளை வகித்து, முதல்வர் மம்தாவின் நம்பிக்கைக்குரியவராக இருந்த சுவேந்து அதிகாரி, அஸ்ஸாம் காங்கிரஸ் கட்சியின் அமைச்சரான ஹிமந்தா பிஸ்வா சர்மா, மகாராஷ்டிரா முன்னாள் முதல்வர் நாராயண் ரானே, மகாராஷ்டிரா துணை முதல்வர் அஜித் பவார், சிவசேனா கட்சியின் எம்.பி. பாவனா கவாலி, சிவசேனா எம்.எல்.ஏ பிரதாப்சர்நாயக், சிவசேனா பிரமுகர் யஷ்வந்த் ஜாதவ் ஆகியோர் மீதான வழக்குகள் பா.ஜ.க.வில் சேர்ந்த பிறகு விலக்கிக் கொள்ளப்பட்டன. இதுதான் பா.ஜ.க.வின் ஊழல் ஒழிப்பு பாணி ஆகும்.

**நாடாளுமன்றத் தேர்தல் நெருங்க நெருங்க பா.ஜ.க.வின் முகத்திரை கிழிந்து கொண்டே இருக்கிறது.**

## கிருஷ்ணகிரி நகராட்சியில் திட்டப் பணிகள் துவக்கம்!

கிருஷ்ணகிரி, மார்ச் 18 –

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் கிருஷ்ணகிரி நகராட்சி 26 வது வார்டில் கழிவுநீர் கால்வாய் தூர்வாரும் பணி , கிருஷ்ணகிரி மேற்கு ஒன்றியம் கட்டிகான பள்ளி ஊராட்சி சிமெண்ட் மற்றும் ஜல்லி சாலைகள், உணவு தானியக்கிடங்கு , காவேரிப்பட்டணம் கிழக்கு ஒன்றியம் மாரிசெட்டியில் அள்ளியில் ஊராட்சி மன்ற அலுவலகம், நூலக கட்டிடம், அங்கன்வாடி மையம், நாகோஜன அள்ளியில் பள்ளி கட்டிடம் , கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றியம் காட்டி நாயனப்பள்ளி சிமெண்ட் சாலை ஆகிய பணிகளை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மணிமேகலை நாகராஜ், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ் , மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி , சாவித்திரி கடலரசு மூர்த்தி, பொருளாளர் கதிரவன், கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர் நவாப் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



ஆத்தூர் ஒன்றியம் எஸ்.பாறைப்பட்டி ஊராட்சி ஆதிதிராவிடர் காலனியில் கலைஞரின் கனவு இல்ல திட்ட வீடுகள் கட்டும் பணியை ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி துவக்கி வைத்தார். உடன் ஒன்றியச் செயலளார் முருகேசன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாஸ்கரன், ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி, ஊராட்சி மன்றத் தலைவர் ராஜேஸ்வரி, ஒன்றியக்குழு உறுப்பினர் செல்வி காங்கேயன் உட்பட பலர் உள்ளனர்.

### தமிழ்நாடு முழுவதும் ஊரக வளர்ச்சி துறைமூலம்

# எட்டு இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்!

### ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

சின்னாளபட்டி, மார்ச் 18-

கலைஞரின் கனவு இல்ல திட்டம் மூலம் இந்த ஆண்டு ஒரு லட்சம் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் என்றும் தமிழகம் முழுவதும் ஊரக வளர்ச்சி துறை மூலம் எட்டு லட்சம் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் என்றும் வீரக்கல் பிரிவு அருகே நடைபெற்ற கனவு இல்ல திட்ட விழாவில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் முன்னிலை கோட்டை ஊராட்சிக்கு உட்பட்ட வீரக்கல் பிரிவு மற்றும் எஸ்.பாறைப்பட்டி ஊராட்சி, ஆதிதிராவிடர் காலனி பகுதியில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் கனவு இல்ல திட்ட வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கான பூமி பூஜை நடைபெற்றது. வீரக்கல் பிரிவு அருகே நடைபெற்ற விழாவிற்கு ஆத்தூர் ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன் தலைமை தாங்கினார்.

மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாஸ்கரன், தி.மு.க. தலை மைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஆத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் முருகேசன், மேற்கு ஒன்றிய செயலாளர் ராமன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்திய மூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்டார வளர்ச்சி அலுவலர் குமரவேல் வரவேற்றார்.

விழாவில் தி.மு.க. மாநில துணை பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சி துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி கலந்து கொண்டு கலைஞரின் கனவு இல்ல திட்ட வீடுகள் கட்டும் பணியை துவக்கி வைத்த பின்பு பொதுமக்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, இத்திட்டத்திற்கு கலைஞரின் கனவு இல்லம் திட்டம் என பெயர் வைத்ததற்கு தமிழக அரசிற்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் குடிசையில்லா வீடுகளை உருவாக்க வேண்டும் என்று நினைத்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர். அவர் நினைத்ததை இன்று செயல்படுத்தி காட்டி வருபவர் திராவிட மாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களே என்றார்.

நான் ஊரக வளர்ச்சி துறை அமைச்சராக பொறுப்பேற்று ஓராண்டிற்குள் எண்ணற்ற நலத் திட்டங் கள் ஆத்தூர் தொகுதியில் செயல்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து கிரா மங்களுக்கும் தார் சாலை, கிராமங்கள் தோறும் நியாய விலை கடைகள் அனைத்து சமுதாய மக்களுக்கும் பயன் பெறும் வகையில் சமுதாய கூடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் கிராம மக்கள் சிரமமின்றி பொருட்களை எடுத்துச்செல்லவும் தங்கள் வீட்டு இல்ல விழாக்களை குறைந்த செலவில் நடத்த முடியும் என்ற சூழ்நிலை உருவாகி உள்ளது.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைவர் கலைஞர் வழியில் ஜாதி, மத, இன பேதமின்றி அனைவருக்கும் அனைத்து நலத்திட்டங்களும் கிடைக்கும் படி சிறப்பான திட்டங் களை தமிழகம் முழுவதும் செயல்படுத்தி வருகிறார். அவர் வழங்கிய மகளிர் உரிமைத்தொகை கிராமங்களில் உள்ள மகளிருக்கு வர பிரசாதமாக அமைந்துள்ளது என்றார்.

நிகழ்ச்சி யில் ஆத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் குணவதி, தி.மு.க. நிர்வாகி அம்பை ரவி, ஒன்றிய குழு உறுப்பினர்கள் வண்ணம்பட்டி காணிக்கை சாமி, வீரக்கல் செல்வி காங்கேயன், ஆத்தூர் கிழக்கு ஒன்றிய துணை செயலாளர்கள் ராஜேந்திரன், எம்.சி.பாண்டியன், பொருளாளர் ஜாதிகவுண்டன்பட்டி கருப்பையா, மேற்கு ஒன்றிய துணை செயலாளர் கலாபச்சை, மல்லையாபுரம் சக்திவேல், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், ஊராட்சி மன்ற தலைவர்கள் எஸ். பாறைப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர்கள் முன்னிலைக்கோட்டை அந்தோணியம்மாள் அலெக்ஸ், எஸ். பாறைப்பட்டி பாலாஜி, வீரக்கல் ஊராட்சி மன்றத் தலைவர் பிள்ளையார்நத்தம் உலகநாதன், ராஜேஸ்வரி தங்கவேல், ஆத்தூர் ஜம்ருத் பேகம், சீவல்சரகு ராணி ராஜேந்திரன், அக்கரைப்பட்டி லட்சுமி சக்திவேல், தி.மு.க. மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் கும்மம்பட்டி விவேகானந்தன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைபட்டி வாஞ்சி நாதன், ஒன்றிய பொறியாளர் முருக பாண்டி, ராமநாதன், ஊராட்சி மன்ற துணை தலைவர்; வீரக்கல் யூஜின், அரசு ஒப்பந்தகாரர்கள் செந்தில்குமார், விக்னேஷ், ஜீசஸ் அகஸ்டின் மெல்வின், திமுக நிர்வாகிகள் டாஸ்மாக் வடிவேலு, ஒன்றிய பிரதிநிதிகள் வடக்கு தெரு சந்திரன், தங்கபாண்டி, உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### சீர்மரபினருக்கு டி.என்.டி. ஒற்றைச் சான்றிதழ் வழங்க உத்தரவிட்ட

# ஒப்பற்ற தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

### தமிழ்நாடு அரசு சீர்மரபினர் நலவாரிய துணைத் தலைவர் இராசா அருண்மொழி அறிக்கை!

சென்னை, மார்ச் 18-

சீர்மரபினருக்கு DNT ஒற்றை சான்றிதழ் வழங்கி ஆணை பிறப்பித்த ஒப்பாருமிக்காருமில்லா முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி என சீர்மரபினர் நலவாரிய துணைத் தலைவர் இராசா அருண்மொழி தெரிவித்துள்ளார்.

அவரது நன்றி அறிக்கை வருமாறு:-

சீர்மரபினர் இன மக்களுக்கு ஒரே மாதிரியான சான்றிதழ் வழங்குவதற்கு உத்தரவிட்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மாபெரும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சீர்மரபினர் வகுப்பினர்களுக்கு Denotified Communities மற்றும் Denotified Tribes என இரண்டு சான்றிதழ்கள் வழங்குவதால் குழப்பமான சூழ்நிலை இருந்தது. இதனை அகற்றுவதற்கான முயற்சியை எடுப்போம் என்று முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்திருந்தார்கள். ‘சொன்னதைச் செய்வோம்’ என்ற முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் செயல்படும் முதலமைச்சர் அவர்கள், அந்த இரட்டை சான்றிதழ் குழப்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார்கள்.

சுதந்திரம் பெறுவதற்கு முன் ஆங்கிலேய ஆட்சியில் குற்றப்பரம்பரை சட்டத்தினால் (Criminal Tribes Act) பாதிக்கப்பட்ட வகுப்பினர்கள், சீர்மரபினர் வகுப்பு என வகைப்படுத்தப்பட்டார்கள். இம்மக்களின் கல்வி, வேலை வாய்ப்புக்கான பல்வேறு வழிமுறைகளை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் செயல்படுத்தினார்கள்.

1969 ஆம் ஆண்டு முதல் முதலில் முதல்வர் ஆன கலைஞர் அவர்கள்தான் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையை உருவாக்கினார்கள். பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கான சட்டநாதன் ஆணையத்தை அமைத்தார்கள். அந்தப் பரிந்துரைப்படி சமூகநீதியை அமல்படுத்தினார்கள். பிற்படுத்தப்பட்டோருக்கு 31 சதவிகித இடஒதுக்கீடு வழங்கினார்கள்.

1989 ஆம் ஆண்டு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என புது இடஒதுக்கீடு உரிமையை உருவாக்கி கல்வி, வேலை வாய்ப்பில் இந்த சமூக மக்கள் முன்னேற வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தவர் முதல்வர் கலைஞர் அவர்கள். மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருடன் சேர்த்து 20 விழுக்காடு இடஒதுக்கீடு இம்மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதில் 68 வகுப்பினர்கள் சீர்மரபினர் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.



முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான அரசால் 2008 முதல் சீர்மரபினர் வகுப்பினர் என சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது. பின்னர் 2019 ஆம் ஆண்டில் அன்றைய அரசால் மாறுபாடான அறிவிப்பு செய்யப்பட்டது. மாநில அரசின் உதவிகள் பெறுவதற்கு இந்த 68 வகுப்பினர்களும் சீர்மரபினர் (DNC) என அழைக்கப்படுவர் எனவும், ஒன்றிய அரசின் நலத்திட்ட பயன்களைப் பெறுவதற்கு இந்த 68 வகுப்பினர்களும் சீர்மரபினர் (DNT) என அழைக்கப்படுவர் என ஆணை வெளியிடப்பட்டது. இது குழப்பத்தை ஏற்படுத்தியது.

மேற்கண்ட அரசாணைகளின்படி இரண்டு சான்றிதழ்கள் சீர்மரபினர் வகுப்பினர்களுக்கு Denotified Communities / Denotified Tribes என இரண்டு சான்றிதழ்களுக்குப் பதிலாக ஒரே சான்றிதழ் வழங்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இனி வருவாய் அலுவலர்கள் சீர்மரபின வகுப்பினர்களுக்கு ஒரே சான்றிதழ் வழங்குவார்கள் என்றும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

இலட்சக்கணக்கான மக்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு ஒற்றைக் கையெழுத்தில் உத்தரவிட்ட முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராக மட்டுமல்ல திராவிடப் பேரினத்தின் தலைவராகச் செயல்பட்டு வரும் முதலமைச்சரின் பொற்கால ஆட்சி தொய்வில்லாமல் தொடரட்டும் என வாழ்த்துகிறோம்.

இவ்வாறு இராசா அருண்மொழி நன்றி தெரிவித்துள்ளார்.



மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தியை இந்தியா கூட்டணியின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மதுரை நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் சு.வெங்கடேசன் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்ற போது எடுத்த படம். உடன் மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., மற்றும் கழகத்தினர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.